**செய்தி வெளியீடு எண்: 106** **நாள்: 19.02.2013**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (19.2.2013) சென்னை, சாந்தோம் நெடுஞ்சாலையில் நடைபெற்ற விழாவில், சென்னை மாநகரில் உள்ள ஏழை எளிய அடித்தட்டு மக்கள் பயன் பெறும் வகையில் சென்னை மாநகராட்சியின் சார்பில் மலிவு விலையில் சுகாதார மற்றும் தரமான உணவு வழங்கும் திட்டத்தை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.

சென்னை மாநகரில் வாழும் ஏழை எளிய மக்கள், அன்றாட கூலி வேலை செய்பவர்கள், ஓட்டுநர்கள், பாரம் தூக்குபவர்கள் என குறைந்த ஊதியத்தில் பணிபுரிபவர்களும் சென்னைக்கு பணி நிமித்தமாக வந்து செல்பவர்களும் பயன் பெறும் வகையில் சுகாதார மற்றும் தரமான உணவுகளை மலிவு விலையில் வழங்குவதற்காக சிற்றுண்டி உணவகங்கள் தொடங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

இத்திட்டத்தின் தொடக்கமாக, வார்டிற்கு ஒன்று வீதம் 200 சிற்றுண்டி உணவகங்கள் துவக்க பணிகள் தொடங்கப்பட்டு, முதற்கட்டமாக சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களிலும் மண்டலத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில், திருவொற்றியூர் மாநகராட்சி வணிக வளாகம்; மணலி மாநகராட்சி கட்டடம்; மாதவரம், சூரப்பட்டு சமூக நலக்கூடம்; பழைய வண்ணராப்பேட்டை, பொம்மிசிவராமலு தெரு மாநகராட்சி கட்டடம்; சென்னை–1, நாட்டுப் பிள்ளையார் கோயில் தெரு மாநகராட்சி கட்டடம்; புளியந்தோப்பு, டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலை பழைய மண்டல அலுவலகம்; அம்பத்தூர், ஒரகடம் மாநகராட்சி கட்டடம்; கீழ்ப்பாக்கம், டெய்லர்ஸ் சாலை பழைய மண்டல அலுவலகம்; சாந்தோம் நெடுஞ்சாலை மாநகராட்சி கட்டடம்; தியாகராய நகர், சிவஞானம் சாலை மாநகராட்சி கட்டடம்; மதுராவாயல், பூந்தமல்லி நெடுஞ்சாலை மாநகராட்சி கட்டடம்; நங்கநல்லூர், நேரு நெடுஞ்சாலை மாநகராட்சி கட்டடம்; திருவான்மியூர், பி.ஜீ.ஈ காலனி மாநகராட்சி கட்டடம்; பெருங்குடி, அண்ணா நெடுஞ்சாலை வணிக வளாகம்; துரைப்பாக்கம், கண்ணகி நகர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தொழிற்பயிற்சி கூடம் ஆகிய 15 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மலிவு விலை சிற்றுண்டி உணவகங்களை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று சென்னை, சாந்தோம் நெடுஞ்சாலையில் நடைபெற்ற விழாவில் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து 3 நபர்களுக்கு உணவினை வழங்கி விற்பனையை துவக்கி வைத்தார்கள். மேலும், மகளிர் சுய உதவிக் குழு மூலம் தயாரிக்கப்பட்ட உணவினை பார்வையிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உணவு தயாரிக்கப்பட்ட விதம் குறித்து அவர்களிடம் கேட்டறிந்தார்கள்.

இந்த மலிவு விலை சிற்றுண்டி உணவகங்களில் காலை 7.00 மணி முதல் 10.00 வரை இட்லி ஒன்று ஒரு ரூபாய்க்கு சிற்றுண்டியாகவும், மதிய உணவாக நண்பகல் 12.00 மணி முதல் 3.00 மணி வரை சாம்பார் சாதம் 5 ரூபாய்க்கும் தயிர் சாதம் 3 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும். இந்தத் திட்டம் அந்தந்த பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் செயல்படுத்தப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சென்னை மாநகராட்சி துணை மேயர், சென்னை மாநகராட்சி உறுப்பினர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 19.2.2013